# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி...

போதைப் பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த, வழக்குகள் பதிதல், கைது, போதைப் பொருட்கள் பறிமுதல், சொத்துகள் முடக்கம் என்று பல்வேறு நடவடிக்கைகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

போதைப் பொருள் மற்றும் உளவெறி ஊட்டும் பொருட்கள் சட்டத்தின் (NDPS) கீழ் பதியப்பட்டிருக்கின்ற வழக்குகளில் தொடர்புடைய முந்தைய குற்றவாளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, 2019 முதல் இந்த வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, கண்காணித்து கைது செய்து கொண்டு வருகிறோம்.

அதோடு, நிதி தொடர்பான விசாரணை / சொத்துகள் மற்றும் வங்கிக் கணக்குகளை முடக்குதல் போன்ற நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

போதைப் பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு எதிராக நிதி தொடர்பான விசாரணை நடத்தப்பட்டு, உரிய சட்டத்தின்கீழ் அவர்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் முடக்கப்படுகிறது.

ஆகஸ்ட் 11, 2022 முதல், 154 குற்றவாளிகளுக்கு எதிராக நிதி தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அவர்களிடமிருந்து 18 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 45 அசையும் / அசையா சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.

**கடைநிலை காவல்துறை அதிகாரிகள் வரை எனது 'சல்யூட்!'**

இதுவரை தமிழ்நாட்டு வரலாற்றில் இல்லாத அளவுக்கு 16 ஆயிரம் கிலோ கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் அழிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நடவடிக்கை எடுத்த காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவு ஏ.டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால் உள்ளிட்ட கடைநிலை காவல்துறை அதிகாரிகள் வரை அனைவரையும் நான் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். உங்களுக்கு என்னுடைய சல்யூட்.

இந்த ஓராண்டில், NDPS சட்டவழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 5,184 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டிருக்கிறது.

"கஞ்சா சாகுபடி இல்லாத தமிழ்நாடு" என்ற நிலையை தமிழ்நாடு இப்போது தொடர்ந்து பராமரித்துக் கொண்டு வருகிறது. ஆந்திரப் பிரதேசம், ஒடிசா, தெலங்கானா மற்றும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களிலிருந்து கஞ்சா கடத்தப்படுவதுதான், தமிழ்நாட்டுக்கு கஞ்சா நுழைய முக்கிய ஆதாரமாக இருக்கிறது.

இதையெல்லாம் கவனத்தில் வைத்து, அதைத் தடுக்கிற வகையில் பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். ஒரு சில மாநிலங்களில் இருப்பதுபோல மோசமான நிலைமை தமிழ்நாட்டில் இல்லையென்றாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு ஆகிய நடவடிக்கைகள நாம் முடுக்கி விட்டிருக்கிறோம்.

நான் பல ஆய்வுக் கூட்டங்களில் தெரிவித்த ஒரு கருத்தை, மீண்டும் மீண்டும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

**★ ஒவ்வொரு காவலரும் தனது காவல் நிலைய எல்லையில் போதை மருந்து விற்பனையை முற்றிலுமாக தடை செய்ய உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.**

**★ கஞ்சா விளைவிப்பதை முற்றிலுமாகத் தடுத்தாக வேண்டும்.**

**★ மலையடிவாரங்களில் கண்காணிக்க வேண்டும்.**

**★ அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வருவதைத் தடுத்தாக வேண்டும்.**

**★ எல்லை மாவட்டங்களினுடைய சோதனைச் சாவடிகளை அதிகப்படுத்த வேண்டும்.**

**★ கடலோர மாவட்டங்களில் கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டும்.**

**★ காவல்துறையினருடைய ரோந்தை அதிகரிக்க வேண்டும்.**

**★ அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.**

**★ போதைப் பொருள்கள் அதிகம் விற்பனையாகின்ற இடங்களில் நிரந்தரமாகக் கண்காணிக்க வேண்டும்.**

**★ பள்ளி, கல்வி நிறுவனங்களுக்கு அருகில் போதைப் பொருள் விற்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.**

ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரிகளில் 'போதைப்பொருள் எதிர்ப்பு மன்றம்' அமைத்து, அந்தக் கல்வி நிறுவனத்தை போதைப் பொருள் இல்லாத வளாகமாக அறிவிக்க ஆணையிடப்பட்டிருக்கிறது.

மாநிலம் முழுவதும் பள்ளி, கல்லூரிகளில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதைப்பொருள் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஆரோக்கியமான மற்றும் பொறுப்புள்ள அடுத்த தலைமுறையை உருவாக்கும் என்று நான் நம்புகிறேன்.

போதைப் பொருள் நடமாட்டத்தைத் தடுத்து நிறுத்த, என்னுடைய தலைமையில் அடிக்கடி ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

சிறப்பாகச் செயல்படுகிற காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களை ஊக்குவிக்கின்ற வகையில், போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோதக் கடத்தலை ஒழிப்பதில், சிறப்பாகச் செயல்படுகிறவர்களுக்கு 'தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம்' என்ற சிறப்புப் பதக்கம் வழங்கப்படும் என்று அறிவித்தேன். அதனடிப்படையில், இந்த ஆண்டு, ஜூன் 26ஆம் தேதி, "சர்வதேச போதைப் பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோதக் கடத்தலுக்கு எதிரான நாள்" அன்று ஆறு காவல்துறை அதிகாரிகள் / காவலர்களுக்கு இந்தப் பதக்கம் வழங்கப்பட்டிருக்கிறது.

**கல்வி நிறுவனங்களில் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி!**

அரசினுடைய போதை ஒழிப்புச் செயல்பாடுகளைப் பரவலாக எடுத்துக் கொண்டு செல்வதற்காக, இன்று எல்லா கல்வி நிறுவனங்களிலும், மாபெரும் போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரசு அலுவலர்கள், கல்வி நிறுவனங்கள், மாணவர்கள் என்று நம் எல்லாரும் போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

பள்ளி மாணவர்கள் நிறைய பேர் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு பள்ளியில் Health is Wealth என்று சொல்லிக் கொடுத்திருப்பார்கள். இதை நீங்கள் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆசிரியர்களும் இதை எப்போதும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கவேண்டும்.

நீங்கள் என்ன தான் பணம் சம்பாதித்தாலும் நல்ல உடல்நிலை இருந்தால்தான் உங்களால் தொடர்ந்து உழைக்கவும் முடியும், சம்பாதித்த பணத்தை வைத்து சந்தோஷமாக இருக்கவும் முடியும். இதுதான் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அறிவுரையாக வழங்க வேண்டும் என்று நான் இந்தத் தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

போதை ஒழிப்பைப் பொறுத்தவரை, தடுப்பு நடவடிக்கைகளும், விழிப்புணர்வு பிரச்சாரமும் ஒரு சேர நடக்க வேண்டும். காவல்துறையும், பொதுமக்களும் ஒரே நோக்கத்துடன் செயல்பட வேண்டும்.

இந்த நான்கும் நேர்கோட்டில் இணைந்தால் போதை இல்லாத தமிழ்நாட்டை நிச்சயம் உருவாக்கலாம்! உருவாக்குவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# அமைச்சர் எ.வ.வேலு கேள்வி...

முதல் பக்கத் தொடர்ச்சி...

நாடாளுமன்றத்தில் பேசியது அதிர்ச்சி அளிக்கக்கூடியதாக இருந்தது.

எந்த மாநிலத்தில் என்ன நடக்கிறது, யார் எப்படி செயல்படுகிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதை அறிந்துகொள்ளக் கூடிய உளவு அமைப்புகளை ஒன்றிய அரசு கொண்டுள்ள நிலையில், நாட்டின் பிரதமரிடம் எப்படிப்பட்ட தவறான தகவல்கள் கொண்டு செல்லப்படுகின்றன, அதை அவர் உறுதிப்படுத்தாமல் எப்படி பேசுகிறார் என்பதற்கு, இந்தியா என்றால் வடஇந்தியாதான் என்று பேசியதாக அமைச்சர்கள் முதல் பிரதமர் வரை பேசியிருப்பது காட்டியுள்ளது.

அண்மையில் பேராசிரியர் சுப.வீ அவர்களின் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பிலான நிகழ்வில் நான் கலந்து கொண்டு பேசியதைத்தான் பிரதமரும் ஒன்றிய அமைச்சர்களும் திரித்துக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிகழ்வில், திராவிட இயக்கத்தின் கொள்கை வலி மையை எடுத்துக்கூறி, அந்த வழியில்தான் திராவிட மாடல் அரசை தமிழ்நாட்டின் முதலமைச்சர் சிறப்பாக நடத்தி வருகிறார் என்பதை எடுத்துக் கூறி உரையாற்றினேன்.

**முன்பிருந்த பழைய நிலைமையினை சுட்டிக் காட்டினேன்!**

முன்பு இருந்த நிலை என்ன, இப்போதுள்ள நிலை என்ன என்பதை விளக்கும்போது, "ஒரு காலத்தில் இந்தியா என்ற வார்த்தையில்கூட நமக்கு பெரிய தாக்கம் இருந்தது கிடையாதே! நான் சொல்வது ஒரு காலத்தில். இந்தியான்னா ஏதோ வடக்கே இருக்கிற ஊரு. நம்ம ஊரு தமிழ்நாடுதான். முடிந்தால் இதைத் திராவிடநாடாக்க முடியுமா என்று யோசிப்போம்" என்று முன்பிருந்த பழைய நிலைமையினைச் சுட்டிக் காட்டினேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிடநாடு கோரிக்கையை முன்வைத்ததும், அது குறித்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் I belong to the Dravidian Stock என்று முழங்கியதும் வரலாறல்லவா. பின்னர், இந்தியா மீது சீனா போர் தொடுத்த காலத்தில், வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும் என்று அண்ணா அவர்கள் இந்தியாவின் நலன் கருதி எடுத்துரைத்ததும், பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்கொண்டு இயக்கத்தைக் காப்பாற்றும் விதமாக திராவிடநாடு கோரிக்கையை கைவிட்டதும், பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டாலும் பிரிவினைக் கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதும் வரலாற்று உண்மைகள் அல்லவா!

வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்ற அண்ணாவின் முழக்கம் உண்மையாக இருந்தது. அதனால்தான் மாநில சுயாட்சியைக் கோரினோம். மாநில உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம். அதன் காரணமாக, அன்றைக்கு இருந்த நிலைமை மாறி, திராவிட நாடு என்ற சிந்தனையைக் கைவிட்டு, திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு இந்தியாவில் சிறந்த மாநிலமாக உயர்ந்து நிற்கிறது. ஒன்றுபட்ட ஒருமைப்பாடு கொண்ட - பன்முகத் தன்மையுடன் மாநில உரிமைகளை மதிக்கும் இந்தியாவை மீட்டெடுக்க வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலும், அதனைத் தொடர்ந்து இன்றைய முதலமைச்சர், கழகத் தலைவர் தலைமையிலும் தொடர்ந்து பாடுபடுகிறோம். இந்தியாவின் ஜனநாயகத்திற்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் துணை நின்று மீட்டெடுத்த இயக்கம் தி.மு.க. என்பதை நாடறியும்.

**இந்தியாவையே காப்பாற்ற வேண்டிய நிலைமை முதல்வருக்கு ஏற்பட்டிருக்கிறது!**

இதைத்தான் அந்த நிகழ்வில், "ஏதோ தூரத்தில் இருக்கிற ஊர் இந்தியா என்ற நிலைமையை மாற்றி, இன்று இந்தியாவையே காப்பாற்ற வேண்டிய நிலைமை தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு ஏற்பட்டிருக்கிறது. தமிழனுக்கு அந்தப் பொறுப்பு இருக்கிறது. திராவிட மாடல் ஆட்சிக்கு இருக்கிறது. திராவிடர் கழகம், திராவிட இயக்கத் தமிழர் பேரவை உள்ளிட்ட அனைவருக்கும் இருக்கிறது" என்று எடுத்துரைத்தேன்.

இந்தியாவைக் காக்க வேண்டிய பொறுப்பு எல்லாருக்கும் இருக்கிறது என்பது எப்படி தவறான கருத்தாக இருக்க முடியும்? ஒரு வேளை அந்தப் பொறுப்பை நிறைவேற்றாத ஒன்றிய பா.ஜ.க அரசு, நாட்டின் மீது அக்கறை கொண்டவர்களும் அதை செய்யக்கூடாது என நினைக்கிறதா?

நான் பேசியதை முழுமையாக அறியாத அரைவேக்காடுகள் அதனைக் காதில் வாங்காமல், கவனம் செலுத்தாமல் அரசியல் விளம்பரத்திற்காக எதையோ செய்துவிட்டுப் போகட்டும். பிரதமர் கூடவா முழுமையாக எதையும் தெரிந்து கொள்ளாமல் இத்தனை காலம் ஆட்சி நடத்தியிருக்கிறார் என்பதை நினைக்கும்போது பரிதாபமும் வேதனையும் படுகிறேன்.

**நாங்கள் கலைஞரின் வார்ப்புகள் மிரட்டல்களுக்கு அஞ்ச மாட்டோம்!**

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ஆளும் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள் மணிப்பூர் என்ற வார்த்தையை உச்சரித்ததைவிட, தி.மு.க, தமிழ்நாடு என்று உச்சரித்ததுதான் அதிகம். தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. ஒரு மாநிலக் கட்சியாக இருந்தாலும், அதுதான் இந்தியாவில் உள்ள மாநிலங்களை எல்லாம் இணைக்கின்ற, மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற கட்சி என்ற பயம்தான் பிரதமரையும் அமைச்சர்களையும் இப்படிப் பதற்றத்துடன் பேச வைத்திருக்கிறது.

கழகத் தலைவர் அவர்கள் உடன்பிறப்புகளுக்கு எழுதியுள்ள உங்களில் ஒருவன் மடலில் குறிப்பிட்டிருப்பதுபோல, நாங்கள் கலைஞரின் வார்ப்புகள். அவதூறுகள், மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம். உண்மையை உரக்கச் சொல்வோம். கழகத் தலைவர் ஆணைக்கேற்பச் செயல்பட்டு நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் வெல்வோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட

# 3400 குடும்பங்களுக்கு கொசு வலைகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

*சென்னை, ஆக 12-*

இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு விலையில்லா கொசுவலை வழங்கும் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு-59க்குட்பட்ட சத்தியவாணி முத்து நகரில் வசிக்கும் 1500 குடும்பங்களுக்கு கொசு வலைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-57க்குட்பட்ட வால்டாக்ஸ் சாலை, ஜட்காபுரம் பகுதியில் வசிக்கும் 1100 குடும்பங்களுக்கும், வார்டு-54க்குட்பட்ட உட்வார்ஃப் சாலை முதல் தெரு மற்றும் 3ஆவது தெருவில் வசிக்கும் 800 குடும்பங்களுக்கும் விலையில்லா கொசுவலைகளை நேற்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலைத் துறை அமைச்சர் பேசியதாவது:

வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலத்தில் நீர்நிலைகளை ஒட்டி இருக்கும் 14,000 குடும்பங்களுக்கு கொசுவலைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் தொடக்கமாக, இராயபுரம் மண்டலம், சத்யவாணி முத்து நகர். ஜட்காபுரம், கல்யாணபுரம், வுட்வர்ப் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் 3400 குடும்பங்களுக்கு நேற்று கொசுவலைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொசு ஒழிப்பு பணிகளும் மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வருகிறது. நீர் நிலைகளில் ஆகாயத்தாமரை மற்றும் வண்டல் போன்ற கழிவுகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நீர்நிலைகள் மற்றும் கால்வாய்களில் கொசு உற்பத்தியாகாமல் இருப்பதற்கு கொசு ஒழிப்பு மருந்து தெளித்தல், நீர்நிலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் கொசுப்புகை மருந்து அடித்தல் உள்ளிட்ட பணிகள் முழுவீச்சாக நாளை முதல் மேற்கொள்ளப்பட உள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம்.சிவகுரு பிரபாகரன், மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி க.சரஸ்வதி, ராஜேஷ் ஜெயின் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### வரவேற்புரை: தி.மு. தனியரசு! திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை! சபாபதி மோகன்-கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் சிறப்புரை!

*சென்னை, ஆக.12*

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் எழுத்துக்காரன் தெரு, காலடிப்பேட்டை திருவொற்றியூரில் இன்று (12.8.2023 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

பொதுக்கூட்டத்தில் பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு, 12வது வட்ட செயலாளர் க.வீ.சதீஷ்குமார், வீ.கவி கணேசன் தலைமை கழக வழக்கறிஞர் குறிஞ்சி எஸ். கணேசன் எம்.வி.குமார் பி.எஸ்.சைலஸ் ம.ஜெயராமன் டி.பி.பாலசுந்தரம், முன்னிலை ஆர்.சி.ஆசை தம்பி ஆர்.எஸ்.சம்பத் கே.பிரபாலதி ஆர்.குமரேசன், வட்ட செயலாளர்கள் த.கார்த்திகேயன் டிசிவி மணிகண்டன் எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குறுத்து சி.முனுசாமி, கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர ஏகா.கார்த்திகேயன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்ட பிரதிநிதிகள் ஓய்.நந்திவர்மன், ஆர்.ரஜினிபாபு டி.டி.எம்.பாபு ஆர். டில்லி வி.பழனிவேல், அ. அப்துல் சலீம் கே.கார்த்திகேயன் ம.ஏத்திராஜ் ப.சந்தானகிருஷ்னன் எம்.எம். செந்தில் பி.ஜி.அவினாஷ் சி.அருண்குமார் எஸ். கிஷோர், பா.கண்ணபிரான் வ.மோகன் எஸ்.பாக்கியமணி ஏ.தாராபானு மு.சண்முகம் கே.வேணுகோபால் ஏ.ஜெயசீலன் ஜ.ராஜ்குமார் எம்.எஸ்.பொன்ராஜ் எஸ். கார்த்திஸ்வரன் ஏ.தங்கராஜ் எம்.மாலதி கேப்டன் லோகநாதன் வி.புஷ்பகலா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். முனைவர் கழக கொள்கை பரப்பு செயலாளர் சபாபதி மோகன் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புரை, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், வீ.கண்ணதாசன், ஆர்.பத்மநாபன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மிசா பமதிவாணன், வி.ராமநாதன் ஆகியோர் பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவலகி பாலகிருஷ்ணன், எம். ஆனந்தன், வை.ம.அருள்தாசன், ஏ.வி. ஆறுமுகம், எஸ்.நந்தகோபால், பொதுகுழு உறுப்பினர்கள் டி.ஏ.ராஜி, இரா. முருகேசன், சாந்தி பக்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெய்மதன், ஜி.துக்காராம், புழல் என்.நாராயனன், ஜி.தயாளன், மீ.வே.கர்னாகரன், பெ.சரவணன், ஜி.ராஜேந்திரன், மு.சிவகுமார், கே.பி.சொக்கலிங்கம், பி.தமிழரசன், வி.ராஜகுமாரி, உமாசரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா பானுமதி, சந்தர் ந.திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ்.குறளரசன், அ.இந்துமதி, எம்.வஜ்ரவேல், வ.முத்துசாமி, ஆர். டி.ரமேஷ்குமார், ஜி.தினகரன், கே.துர்காபாய், எம். எஸ்.நாகலிங்கம், மு. மாணிக்கவேல், கே.பவுல் கே.கண்ணன், டி.கணேசன், எம்.செல்வம், த.காரிகால சோழன், ஆர். தினேஷ்குமார், எம்.சந்திரகுமார், எஸ்.ஆர்.மலைராஜ், வி.வீரமுத்து, இ.வி.சரவணன், ஆர்.மோகனசுந்தரம், பொன்.கோ.விஜயன், எஸ். மகேந்திரன், முருகா எஸ். ஆறுமுருகம், ஜி.தினேஷ், எஸ்.கணேசன்,

எம்.ராம்குமார், என். கிருஷ்ணமூர்த்தி, எஸ். ஸ்டாலின், பா.செல்வராஜ், என்.விஜயரங்கன், ஏ.ஞானமூர்த்தி, எஸ்.ரீதர், ஆர். டி.மதன்குமார், சி.எஸ்.எஸ். டி.சீனிவாசன், மோரை சதீஷ்குமார், கேபிள் டிவி த.வேல்கணேசன், டி.ஜி. ஆர்.மணிவண்ணன், ஜி. கே.இனியவன், எஸ்.சீனிவாசன், எம்.கோமளவள்ளி, வி.தியாகராஜன், கு.தமிழ்மணி, த.தேவநேசன், மா.வே.நா.உதயகுமார், இ.திருஞானம், எம்.அண்ணம்மாள், அ.அருளானந்தம், சு.சந்தானம், சிவரஞ்சனி, பா.அரங்கநாதன், எம்.அமிர்தராஜ், என்.சுந்தரமூர்த்தி, கே.முருகேசன், ஜிம் பரசு லைலண்டு, எஸ். குமார், அ.தயாளன், வே.இளங்கோவன், எஸ். பொன்னிவளவன், நி.நித்தியதாசன், மகேஷ் (எ) மகிழன், பால உமாபதி, எம். கிஷார், ஜெகநாதன், சுகுந்தா முனுசாமி, மு.கலைவாணன் விக்டோரியா, இ.ஆனந்த், ஆர்.துரைராஜ், பி.ஆர்.பாரூக், கோ.ரமேஷ், பா.சதிஷ்குமார், எ.பி. ஜே.பாலமுருகன், பி.சரவணகுமார், ஏ.புவனேஷ், எம்.பிரேம்குமார், மா.ராமசாமி, கே.மோகன்ராஜ், கலையரசன், சூரியராஜ், ஜி.ஆதிஷேஸ், தீபக் தனியரசு, நவாஷ் சாரதி, பாலாஜி ஜயப்பன், வி.வி.வி. வினோத், திருவாரூர் மூர்த்தி, விக்னேஷ், தயாளன், விக்னேஷ், லோகநாதன், மெடிக்கல் ரவி, பாலாஜி உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

மாவட்ட பிரதிநிதி எஸ். பாஸ்கரன் நன்றி கூறுகிறார்.

---

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி. செங்குட்டுவன் அறிவிப்பு!

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 16.8.2023 புதன்கிழமை, காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள . கழக அலுவலகத்தில் டி.எம்.கதிர்ஆனந்த், தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா; 2. அணியின் வளர்ச்சி பணிகள் குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 11.8.2023

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்,
தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

---



முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், திருநின்றவூர் முழு நேரக் கிளை நூலகம், வாசகர் வட்டம் இணைந்து நடத்தும் மாபெரும் புத்தக கண்காட்சியை முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. திறந்து வைத்து பார்வையிட்டார். அருகில் நகர கழக செயலாளர் தி.வை.ரவி, நகர மன்ற தலைவர் உஷாராணி ரவி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பொது மேலாளர் ச.சண்முகநாதன், பி.வி.சுந்தர் தலைமைக் செயற்குழ உறுப்பினர் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி, மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி. தேசிங்கு, நகராட்சி ஆணையர் புகேந்தரி, நகர மன்ற துணை தலைவர் சரளா நாகராஜ், ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரி கந்தன், நகர நிர்வாகிகள் ஜெ.அன்பழகன், சி.கமலக்கண்ணன், தெ.நாகராஜ், ர.பேபி, ஆர்.ரவி, ச.பாபு, சீ.குணசேகரன், கவுன்சிலர் பி.எல்.ஆர்.தேவியோகா, கிளை நூலக வாசகர்கள் இரா,சுரேஷ் பாபு, இ.கணேஷ்பாபு, ஜி.பி.பரணிதரன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# திருவொற்றியூர் 2வது வட்டத்தில் மலரஞ்சலி!

## கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை!

*சென்னை, ஆக. 12-*

கழகதலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநில இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவொற்றியூர் சட்ட மன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் அறிவுறுத்தலின்படி 2வது வட்டத்தில் தமிழின தலைவர் அய்யா கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாள் திருவொற்றியூர் மேற்கு பகுதி முன்னாள் துணை செயலாளர் இ.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் நகர செயலாளர் அ.பாண்டியன், 2வது வட்ட முன்னாள் அவைதலைவர் அய்யா டி.எஸ். மணி, திருவொற்றியூர் மேற்கு பகுதி முன்னாள் துணை செயலாளர் இ.வீ. கருணாநிதி, முன்னாள் வட்ட துணை செயலாளர் ஜெ.திலகர், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் டி.தேசப்பன், ரமேஷ், கிராம தலைவர்கள் இளங்கோ, சுந்தரேசன், பாண்டியன், கழக உடன்பிறப்புகள் ஆர்.சுரேஷ், ஜி.முருகன், ஜி.பாபு, பால்ராஜ், வி.ஆல்பர்ட், இளைஞர் அணி கே.முனுசாமி, சிவப்பிரகாசம், உதயகுமார், டி.ராஜேஷ் மகளிர் அணி நிர்வாகிகள் பகவதி, நிர்மலா, சந்தியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதிசந்தோஷ்க்குமார், கலைஞரின் திருஉருவப் படத்திற்கு மலர் துவி நினைவஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியை ஏற்பாடினை சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தக அணி மாவட்ட துணை தலைவர் எஸ்.சுரேஷ் செய்திருந்தார்.

---

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் நாளை (13.8.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, "முத்தமிழறிஞரின் சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகளை" மக்களிடம் கொண்டு சேர்த்தல்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 11.08.2023

**ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு